செய்தி வெளியீடு: 731

மு. கருணாநிதி
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை 600 009

நாள்: 06.09.08

## வாழ்த்துச் செய்தி

தமிழகக் காவல்துறை தனது 150-வது ஆண்டில் அடியெடுத்து வைப்பதை அறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறேன். சிறப்புமிக்க வரலாற்றிற்கும், பாரம்பரியத்திற்கும் சொந்தமான தமிழகக் காவல் துறை, தனது சீரிய மக்கள் பணியிலும், திறமையிலும் உலக காவல்துறை வரிசையில் உயரிய இடத்தைப் பெற்று வந்துள்ளது என்றால், அது மிகையாகாது. சட்டத்தை மதிப்போர்க்கு இன்முகம் காட்டியும், சட்டத்தை மீறுவோரை இரும்புக்கரம் கொண்டு அடக்கியும் தனக்கெனத் தனி முத்திரை பதித்துள்ளது தமிழகக் காவல் துறை.

அமைதியையும், சட்டம் ஒழுங்கையும் பராமரிப்பதையே குறிக்கோளாகக் கொண்டு, தமிழகம் தொழில்புரட்சியில் முதலிடத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கும் வேளையில் அரசுக்கு உறுதுணையாக, பொதுமக்களின் நண்பனாக, பாதுகாவலனாக தியாக மனப்பான்மையுடன் செயல்பட்டு, பேரறிஞர் அண்ணா அவர்கள் அறிவித்த கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் மேலும் பல வெற்றிகளைக் குவிக்க என்னுடைய உளமார்ந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மு. கருணாநிதி)

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9